1970 ஆகஸ்ட் 25]

பெற்றிருக்கிறார்கள். கல்லூரிகளில் போடப்பட்டிருந்தவர்கள் இப்பொழுது எடுக்கப்பட்டு அங்கு இருப்பவர்களையே போட்டிருக்கிறது. கணக்குப் பார்த்தால் முன்பு இருந்தவர்களைவிட இப்பொழுது இருப்பவர்கள் குறைவு.

*6 வினா—திரு. என். எஸ்.வி. சித்தன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்கள் தொகையின் அடிப்படையில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வைத்தியக் கல்லூரிகளில் இடம் அளிக்கப்பட வேண்டுமென்று மதுரைப் பல்கலைக் கழகம் தமிழக அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதா?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள பிற்படுத்தப்பட்ட பகுதிகளில் உள்ளவர்களுக்காவது அம்மாதிரி அதிகமான இடம் கொடுக்க பரிசீலனை செய்யப்படுமா? தற்போது அந்த மாவட்டங்களில் இருப்பவர்களுக்கு எந்த அடிப்படையில் இடம் அளிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாவட்ட அடிப்படையில் மாணவர்களை, மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கக்கூடாது என்று சுப்ரீம் கோர்ட்டில் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அதற்கு முன்பு, மாவட்ட அடிப்படையிலேதான், ஆங்காங்குள்ள மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து, அந்தத் தொகையின் அடிப்படையில் மாணவர்கள் மாவட்டவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், வேறு எந்தத் துறையைச் சேர்ந்தவர்களாக இல்லாவிட்டாலும், மருத்துவத் துறையில் படித்துத் தேர்ந்தவர்கள் பரவலாக எல்லா மாவட்டங்களுக்கும், எல்லா இடங்களுக்கும் செல்லும் வாய்ப்பு இந்தத் துறையில் இருப்பதால் மாவட்ட வாரியாகத் தேர்ந்தெடுக்கலாம் என்று அந்த முறையைப் பின்பற்றி வந்தது. ஆனால் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பிற்குப் பிறகு, அந்த முறையைப் பின்பற்றாமல், எல்லா இடங்களுக்கும் ஓர் இடத்திலேயே வைத்து, மாநில அளவில் பார்க்கப்பட்டு வந்தது. அதற்காக 4, 5 குழுக்கள் அமைத்து, தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தார்கள். அதிலே என்ன வேறுபாடு வந்தது என்றால், ஒரு குழுவிலே இருப்பவர்கள் தாராளமாக மார்க் போடுவார்களேயானால், அவர்கள் முன் வரிசையிலே வந்து விடுவார்கள். சில குழுக்களிலே இருப்பவர்கள் இதிலேயும் கொஞ்சம் கஞ்சத்தனத்தை வைத்து, மார்க் போடுவதைக் குறைவாகப்

போட்டால் எல்லா மார்க்குகளையும் கொண்டு வந்து பார்க்கும் பொழுது ஒரு குறிப்பிட்ட குழுவிலே இருப்பவர்கள் அதிகமாகி யும், வேறு ஒரு குழுவிலே இருப்பவர்கள் பின் தங்கிய நிலையி லேயும் இருப்பார்கள் என்பதால் அந்தந்தக் கல்லூரிகளிலேயே குழுக்களை ஏற்படுத்தியது. அந்த மாணவர்கள் எந்தக் கல்லூரிக்கு வேண்டுமானாலும் விண்ணப்பம் செய்யலாம், ஆனால் 2, 3 கல்லூரி களுக்கு விண்ணப்பம் செய்தால், அவர்கள் முகவரிக்கு அண்மை யில் இருக்கும் கல்லூரிக்கு விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படு கிறது. எந்தக் கல்லூரிக்கு வேண்டுமானாலும் விண்ணப்பம் அனுப்பலாம். கூடுமான வரையில் அந்த அந்தப் பகுதிகளில் விண்ணப்பம் அனுப்ப வேண்டுமென்று வற்புறுத்தாமல், வேண்டு கோளாக விடுக்கும் அளவில் இந்த ஆண்டு இம் முறையை மேற் கொள்ளப்பட்டிருக்கிறது.

Judges for State Lotteries.

* 7 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state the basis on which judges for the drawal of the State Lotteries are being nominated?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாநில அரசின் பரிசுச் சீட்டுக் குலுக்கலுக்கு நடுவர்களை நியமிப்பதற்காக எந்தவிதமான நிபந்தனைகளும் வரையறுக்கப்படவில்லை. மாநில மத்திய அரசுகளைச் சேர்ந்தவர்களும் பொது மக்களிடையே அதிக அளவு நம்பிக்கையூட்டக் கூடியவர்களுமான உயர்நிலை அதிகாரிகள், பாங்கர்கள், தொழில் அதிபர்கள், பொது வாழ்வில் ஈடுபட்டுள்ள தனிச் சிறப்பு வாய்ந்தவர்கள் ஆகியோரை அரசு தேர்ந்தெடுத்து, நடுவர்களாக நியமிக்கின்றது. இக்குழு 5 பேர்களுக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே பொது மக்கள் பிரதிநிதிகளை அதிக அளவில் சேர்த்துக்கொள்ள இனியா வது முயற்சி செய்யப்படுமா? இந்தப் பரிசுச் சீட்டு விற்பனை முன்பைவிட தற்பொழுது வெகுவாகக் குறைந்திருக்கிறது என்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? எனவே, அரசு இதை மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினா வர்கள் இரண்டு கேள்விகளை ஒரே நேரத்தில் கேட்டிருக்கிறார்கள். இந்தக் குழுவிலே இருப்பவர்களைப்பற்றி எந்தவிதமான புகாரும் இல்லை. இக் குழு மிகவும் நன்றாக நடந்துகொண்டிருக்கிறது. பொதுமக்கள் பிரதிநிதிகளும் சேர்க்கப்படுகிறார்கள். மேலும் சேர்க்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படலாம். ஆனால், பொது வாக பரிசுத் திட்டம் நல்ல வகையிலே நடந்து வருகிறது என்பது தான் அரசாங்கம் கண்டு பிடித்திருக்கும் ஒரு நிலையாகும். இது வரையில் மொத்தம் 16 கோடியே 92 இலட்சத்து, 28 ஆயிரத்து